RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22244

# வழிபாட்டில் நம்பிக்கைகள்

ம. மணிகண்டன் [அ, *], ப. பூஞ்சோலை [அ]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, உமையாள்புரம், செவந்திலிங்கபுரம் - 621 202 முசிறி, திருச்சிராப்பள்ளி, இந்தியா.

# Beliefs in Worship

M. Manikandan [a, *], P. Booncholai

[a] Department of Tamil, Kachiyaapa Munivar Tamiyazhal Kalluri, Musiri, Tiruchirappalli-621202, India

* Corresponding Author:
manimmt@gmail.com

Received: 27-02-2022
Revised: 08-04-2022
Accepted: 25-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

In the Vanniya drama, people's beliefs have a special place in many ways. This section shows that Vanniyar worship took root among the people. In the Vanniya drama, the beliefs of the people are highlighted and their greatness and worship are described in detail. Folklore is the culture of a particular people preserved in terms of beliefs and customs. Culture blossoms out of people's knowledge, beliefs, art, morality, law and custom. Customs and beliefs are based on the needs of the society. Beliefs and customs are the stepping stones of cultural development. Beliefs are thoughts that are beyond the level of knowledge. Beliefs are created by the people and protected by the society. Human selfishness and social consciousness have been the constant beliefs from time immemorial. In Kottavoor village, certain rituals, customs and beliefs are rooted among the people. This article explains how certain beliefs are still followed from generation to generation because the family will prosper.

**Keywords:** Kottavoor village, Beliefs, Rituals, Drama

## முன்னுரை

வன்னிய நாடகத்தில் மக்களின் நம்பிக்கைகள் பலவாறாகச் சிறப்பிடம் பெற்றுள்ளது. வன்னியர் வழிபாடு மக்களிடையே வேரூன்றியது என்பதனை இவ்வியல் நோக்குகிறது. வன்னிய நாடகத்தில் மக்களின் நம்பிக்கைகள் சிறப்பித்து அவர்களின் பெருமையினையும், வழிபாட்டினையும் விளக்கமாக விவரிக்கின்றது. நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள். பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதன் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கையாக காலம் காலமாகத் தொடர்ந்து வரக் காண்கிறோம்.

கொட்டாவூர் கிராமத்தில மக்களிடையே சில சடங்கு முறைகள் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் வேரூன்றி உள்ளன. குடும்பம் நல்ல முன்னேற்றம் அடையும் என்பதால் பரம்பரை

பரம்பரையாகச் சில நம்பிக்கைகள் இன்றும் எங்ஙனம் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை பற்றி விளக்குகிறது.

## நம்பிக்கை:

தொல்காப்பியத்தில்,

'நம்பும் மேவும் நசையாகுமே' (Tholkappiyar, 2008)

என தொல்காப்பியர் நம்பு என்ற சொல்லினை 'நசை' என்ற பொருளில் கையாண்டுள்ளார். நம்பு என்பதனை 'விருப்பம்' என்ற பொருளில் கையாண்டுள்ளார். நம்பு என்பதற்கு 'விருப்பம், ஆவல், ஆசை' என்று அகராதிகள் பொருள் தருகின்றன.

நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் கட்டப்படுகிறது.

'சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்

சுடுவான் போல நோக்கும்'

எனவும், மற்றொரு பாடலில் நம்புதல் என்ற சொல்லாட்சியும் இடம்பெற்றுள்ளது.

'நாடல் சான்றார் நம்புதல் பழியெனிற்.....' நற்றிணை

மேற்கண்ட சான்றகளிலிருந்து நம்பு என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளிலும், பின்னர் நம்பிக்கை என்ற பொருளிலும் கையாளப்பட்டு வருவதை அறியலாம். காலப்போக்கில் இச்சொல் நம்பிக்கையை மட்டும் குறிப்பதற்குப் பயன்பட்டு வந்துள்ளதனை இன்றைய நடைமுறை வழக்கில் நாம் உணரலாம்.

நம்பிக்கை என்பது காலம் காலமாகத் தொடர்ந்து வருவது. தனி மனித நம்பிக்கைகள் எதிர்காலத்தில் பரவலாக்கப் பெற்றுச் சமூகத்தின் நம்பிக்கைகளாக மலர்கின்றன. நம்பிக்கைகள் சமூகத்தை அடையாளம் காட்டும் கருவிகளாகவும் செயல்படுகின்றன. இப்பகுதியில் கொட்டாவூர் மக்களின் நம்பிக்கைகள் தனித்தும் விளக்கப்பெற உள்ளன.

நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினர்க்குப் பரவி வருகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை நம்பிக்கைகளைக் கொண்டிருக்க காண்கிறோம்.

நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதையும் காண்கிறோம்.

பழங்கால மனிதன் தன்னைச் சுற்றி நடக்கின்ற காரியங்களுக்குக் காரணங்களை கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்தான். பின்னர் இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பிச் செய்வினையில் ஈடுபட்டனர். செய்வினை ஆதிக்கம் குறைந்த சமுதாயத்தில் செய்வினை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக மாறின. சமூக நீதியானது சமூக மாற்றத்திற்குப பின் நாட்டுப்புற நம்பிக்கையாக மாறிற்று. நாட்டுப்புற மருத்துவமே பல நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும்.

## நம்பிக்கைகளின் வகைகள்

கொட்டாவூர் மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கை நிலவுகின்றன.

குழந்தைப் பற்றிய நம்பிக்கைகள்

திருமணம் பற்றிய நம்பிக்கைகள்

கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்

வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள்

மழை பற்றிய நம்பிக்கைகள்

## கடவுள் பற்றிய நம்பிக்கைகள்

இறைவன் அருளால் மக்கட்பேறு கிட்டுமென அனைவரும் நம்புகின்றனர். அபிஷேகம் செய்தல்: வாழ்வியல் துன்பம் நேரும்போது இறைவனிடம் முறையிட்டுப் பால், தேன் போன்றவற்றை இறைவனின் படிமத்திற்கு அபிஷேகம் செய்தால் துன்பம் தீரும் என மக்கள் நம்புகின்றனர்.

மக்களின் நம்பிக்கை: நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படை பொதுக்கூறு எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கன்றன என்கிறார் மானிடவியல் பேறறிஞர் டெய்லர் அவர்கள். வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி. புண்பாட்டினை வழ்க்கையின் முறையாகக் கருதினால் மனிதனின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் போன்றவை இதற்குள் அடங்கி விடுகின்றன. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே தோன்றியவையாகும். நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனவும் மேலும் அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர் என தனது நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் தெளிவு படுத்துகிறார் டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் (Sakthivel, 2020).

‘கண்ணால் பார்க்காமலும், அறிவாராய்ச்சி செய்யாமலும் சில செய்திகள் காரண காரிணம் கருதாமல் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயலாற்றுகின்றன. முன்னோர் வழங்கியதை அப்படியே ஏற்றுக் கொள்வர். ஏன்? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பப்படுவதில்லை. இயற்கையில ஏற்படும் எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கருத்துகள் கற்பித்து அப்படியே நம்பப்படும் இவற்றை நம்பிக்கைகள் என்பர் என்று, தமிழ்நாட்டு வரலாறு என்ற நூல் விளக்கமளிக்கிறது.

வன்னிய நாடகத்தில் மக்களின் வரவேற்பு மிகுதியாக உள்ளது. வன்னிய நாடக வகையில் நிகழ்த்தப்பெறுகிறது. மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட நிலையில் வன்னிய நாடகத்தில் மக்கள் மேலும் ஒன்றி இணைந்திட ஏதுவாகிறது. மக்களின் பக்தி உணர்ச்சி என்றும் குறையாமல் வன்னிய நாடகம் நிகழ்த்தப்பெறுகிறது.

மக்களிடையே வன்னிய நாடகம் இன்றளவும் தொடர்ந்து நிகழ்த்துவதற்குக் காரணம் இத்தெய்வங்களின் அருளிச் செயல்களை மக்கள் உணர்ந்து பயன்பெற்றுள்ளமையே எனில் மிகையாகாது. வன்னிய நாடகம் நிகழ்கிறபோது அம்மன் அருள் பெற்று ஆடும் மக்களையும் மயங்கிக் கிடப்பவர்களைக் காணுகிற மக்களின் நெஞ்சில் தெய்வங்களின் மெய்மை நன்றாகப் பதிந்துவிடுகிறது. பயனடைந்தவர்கள் காணிக்கை செலுத்துவதும் மக்களிடையே மேலும் நம்பிக்கை வளர்க்கிறது. வன்னிய நாடகத்தில் மூன்றாம் நாள் நாடகத்தில் காமாட்சியம்மன் குறத்தி வேடத்தில் மோர் விற்கும் அந்த மோரை வாங்கி உண்டால் குழந்தை இல்லாதவர்க்கு குழந்தை பிறக்கும் என்பது மக்களிடம் உள்ள நம்பிக்கையாகும்.

குறத்தி வேடத்தில் காமாட்சியம்மன் மோர் விற்பதை மக்கள் விரும்பி உண்கின்றனர். வேண்டியதை நிறைவேறினால் மக்கள் காணிக்கை செலுத்துகின்றனர். வன்னிய நாடகம் என்ற நிலையைக் கடந்து தெய்வங்களின் வாழ்க்கையை நேரில் காணுகிற உணர்வோடு மக்களும் ஒன்றிடும் நிலையை வன்னிய நாடகத்தில் காண முடிகிறது. வழிபாட்டுணர்வினை மேலும், மேலும் வளர்ந்திடும் வகையில் வன்னிய நாடகம் நிகழ்த்துகின்றனர். வன்னிய நாடகத்தில் மக்களும் பங்கு கொள்கின்றனர். மக்கள் வழிபாட்டு உணர்வோடு வன்னிய நாடகத்தில் பங்குகொள்கின்றனர்.

காரண காரியத் தொடர்புக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ காரண காரிய தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் கூறுவார் டாக்டர் சு.சக்திவேல் என தனது நாட்டுப்புற இயல் நூலில் சுட்டுகிறார் (Shanmugasundaram, 2007)

வன்னிய நாடகத்தில் மக்கள் பெண் வேடம் அணிந்து கொண்டு நாடகம் நடிக்கும்போது அவர்களுக்கு நன்மை ஏற்படுகிறது. இறைவனுக்குப் பூஜை செய்வதிலும் அடியார்களுக்கு அமுது படைத்து அதனால் புண்ணியம் பெறலாம் என்ற மக்களின் நம்பிக்கையை இவ்விழாவின் அடிப்படையாகிறது. மேலும், வன்னிய நாடகத்தில் கலந்து கொண்டு உணவு உண்டால் பிள்ளைப்பேறு வாய்க்கும் என்ற மக்களின் நம்பிக்கையும் இவ்விழாவிற்கு வலுவூட்டுகிறது.

மக்கள் வன்னிய நாடகம் நடைபெறும் இடத்திற்குச் சென்று தனக்குத் தேவையானதை வேண்டிக் கொள்வர். மூன்றாம் நாள் வன்னிய நாடகத்தில் காமாட்சியம்மன் உருவம் பெற்று வரும் அப்பொழுது மக்கள் வேண்டிக் கொள்வர்.

பழந்தமிழர்களிடையே பல்வேறு நம்பிக்கைகள் இருந்துள்ளது என்பதனை அக்கால இலக்கிய இலக்கண நூல்களில் அதிகமாகக் காணலாம். க. காந்தி என்பவர் ‘தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் என்ற தலைப்பில் சங்க இலக்கியங்களாகிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை மற்றும் பதினென்கீழ்கணக்கு நூல்கள் முதலானவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார் (Kandhi, 1980).

திருமணம் ஆக வேண்டும், குழந்தையில்லாதவர் குழந்தை வரம் கேட்டும், தொழிலில் நஷ்டம், குடும்ப கஷ்டம், தீராத நோய்கள் இவைகளிலிருந்து நலம் பெற வேண்டும் என்பதால் மூன்றாம் நாள் நாடகத்தில் காமாட்சியம்மன், மோர் விற்கும் அந்த மோரை வாங்கி உண்டால் மேற்கண்ட பலனை எதிர்பார்க்கலாம் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். இந்த நம்பிக்கை வீண் போகாமல் மக்களும் பலனை அடைகின்றனர்.

மக்கள் ஒருமுறை வன்னிய நாடக விழாவில் கலந்து கொண்டு தங்களுடைய குறையை நீக்கி நற்பயன் அளித்தால், நான் அடுத்த ஆண்டு வன்னிய நாடக நாளில் இந்த இடத்திற்கு வந்து காவடி எடுத்தல் அல்லது தொகை, அன்னதானத்திற்குத் தேவையான உணவுப் பொருள்கள், நாடகம் நடைபெற உள்ள செலவுகள், மேடை அலங்காரச் செலவுகள், அன்னதான விழாவன்று இரவு இறைவன் புறப்பாட்டு அலங்காரச் செலவு என்று ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்வேன் என வேண்டிக் கொள்வார்கள். இறைவன் முன்னிலையில் வேண்டிக்கொண்டவாறு தன் குறைகள் நீங்கியதும் அடுத்த ஆண்டு அன்னதான விழாவிற்கு வந்திருந்து நேர்த்திக் கடனைச் செலுத்திவிட்டுச் செல்வார்கள்.

## திருமணம் தொடர்பான நம்பிக்கைகள்

திருமணமாகாத பெண்கள் விரைவில் திருமணம் அடைந்துவிட வேண்டும் என விரும்புவர். திருமணம் ஆகவில்லை என்றால் மற்றவர்கள் தூற்றுதற்கு ஆளாக வேண்டும் என்பதற்காக நீண்ட நாள் திருமணமாகாதவர்கள் வன்னிய நாடகம் நடைபெறும் இடத்தில் சென்று தன்னுடையை மகளுக்குத் திருமணம் ஆக வேண்டும் எண்ணி காமாட்சியம்மன் வேடமேற்று வரும்போது தன்னுடைய வேண்டுதலை வேண்டிக் கொண்டு செயல்படுவர்.

அவர்கள் வேண்டுதலுக்கு ஏற்ப மூன்று மாதத்திற்கு பிறகு திருமணம் நடைபெற்றுவிடுகிறது. கொட்டாவூர் மக்கள் மட்டும் இல்லாமல் மற்ற கிராமத்தில் இருந்தும் மக்கள் வந்து வன்னிய நாடகத்தின் போது தங்களுடைய குறைகளைச் சொல்லி வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். வேண்டிய வேண்டுதலை நிறைவேறியவுடன் அதற்கான காணிக்கைகளைச் செலுத்தி மக்கள் நம்பிக்கையோடு வழிபடுகின்றனர்.

## குழந்தை பற்றிய நம்பிக்கைகள்

அருள்மிகு காமாட்சியம்மன் கோபாலமாதாராக உருமாறி விற்கும் பால், மோரை வாங்கி அருந்தினால் குழந்தை இல்லாதோர்க்கு குழந்தை பாக்கியம் உண்டாகும், நோய் நொடி நீங்கும் மாணவர்களின் அறிவுததிறன் மேம்படும் என்பது நம்பிக்கை. திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்துவிட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனின் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டுமே என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பெண்கள் கொட்டாவூர் கிராமத்தில் வன்னிய நாடகம் நடைபெறும் போது வேண்டிக் கொள்வர். mகுழந்தைப் பாக்கியம் வேண்டிய பெண்கள் தாய்மை அடைந்தவுடன் வேண்டிய வேண்டுதலை வன்னிய நாடகம் நடைபெறும்போது வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். ஆண் மகன் பிறந்தால் வன்னிய நாடகத்தில் குழந்தை வேடம் ஏற்று நடிக்க வைப்பர். இத்தகைய நம்பிக்கைகள் இன்றளவும் மக்களிடையே தொடர்கிறது.

## முடிவுரை

வன்னிய நாடகம் இந்நாடகம் எனும் வன்னியரின் வாழ்க்கையை நடித்துக் காட்டி மிகுந்த பக்தியுணர்வுடன் நடத்தப்பெறுகிறது. இவ்விழாவில் நாட்டுப்புற மக்கள் மகப்பேறு வாய்க்க வேண்டும் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு பங்கு பெறுகின்றனர். நாடக உறுப்பினர்கள் தொழில் முறை நடிகர்கள் அல்லர். இவர்களது நடிப்பை மக்கள் நடிப்பாகக் கொள்வதில்லை. இறையம்சம் கொண்டவர்களின் செயல்களாகவே எண்ணி வணங்குகின்றனர். இதில் அங்கத்தினர்களும் நாடகத்தில் பங்குபெறும் உணர்வின்றி விரதமேற்கொண்டு வழிபாட்டு நோக்கத்திலேயே செயல்படுகின்றனர். இவ்விழாவில் பயன் பெற்றோரும் பயன் வேண்டுவோரும் பக்திப் பயன் விளைவோரும் என்ற நிலையில் மக்கள் பங்கு கொண்டு காணிக்கைகளைச் செலுத்துவதால் இவ்விழாவும் தொடர்ந்து நாட்டுப்புறத்தே இன்றளவும் தொடர்கின்றது. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையோடு இயைந்துவிட்ட வன்னிய நாடகம், அவர்களின் பொதுநலம் பேணும் பான்மைக்கும் இறையடியார்களை இறைவனாகக் கண்டு வழிபடும் திறத்திற்கும் சான்றாகத் திகழ்கிறது. வன்னிய நாடகம் நாட்டுப்புற மக்களின் வாழ்வில் இன்றும் நிலைபேறுடையதாகத் திகழ்ந்திட இவ்விழாவில் கலந்து கொள்வதும், நாடகத்தைக் காண்பதும் பிள்ளைப்பேறு முதலான பயன்களை நல்கும் என்றும், புண்ணியம் என்றும் ஊர் மக்கள் கொண்டுள்ள அசையா நம்பிக்கைகளேயாகும்.

## References

Kandhi, K. (1980) Tamilar palakka Valakangalum Nambikaikalum, International Research Insitute of Tamil, Chennai, India

Sakthivel, S. (2020) Nattupura Iyal Aivu, Manivasakar Pathippagam, Chennai, India

Shanmugasundaram, S. (2007) Nattupuraviyal, Kaviya Pathipagam, Chennai, India

Tholkappiyar, (2008) Tholkapiyam, Tamil University, Thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License